8.4.2024

**ஊடக வெளியீடு**

**IR. PATHMANATHAN K.**
தலைமை நிர்வாக அதிகாரி
PBA ஹொல்டிங் பெர்ஹாட் மற்றும் PBAPP.

**PBAPP இன் நோன்புப் பெருநாள் கொண்டாட்டத்தின் 2024 நீர் தற்செயல் திட்டம்**

- **வெப்பமான மற்றும் வறண்ட பண்டிகைக் காலத்தில் அதிகமான நீர்ப் பயன்பாடு காரணமாக தண்ணீர் தொட்டிகள் முன்னேற்பாடாக தயார்நிலை செய்யப்பட்டுள்ளது**

- **நீர்ப் பிரச்சனையை எதிர்நோக்க சாத்தியம் உள்ள பகுதிகள்: தெற்கு செபராங் பிறை (எஸ்.பி.எஸ்) மற்றும் பினாங்கு தீவில் உள்ள ரெலாவ், தென்மேற்கு மாவட்டப் பகுதிகளில் சில இடங்களும் உள்ளடங்கும்.**

பினாங்கு, திங்கட்கிழமை, 8.4.2024: இந்த வெப்பமான மற்றும் வறண்ட நோன்புப் பெருநாள் 2024 பண்டிகைக் காலத்தில் பினாங்கில் திட்டமிடப்படாத நீர் விநியோகத் தடைகளைத் தவிர்க்க அல்லது குறைக்க, 13 தண்ணீர் தொட்டிகளை முன்னேற்பாடு நடவடிக்கையாக PBAPP பயன்படுத்துகிறது.

இத்திட்டத்தில், 3 ஜம்போ தண்ணீர் தொட்டிகள் (அதிகபட்ச திறன்: ஒவ்வொன்றும் 40,000 லிட்டர்) உட்பட, தெற்கு செபராங் பிறையில் (எஸ்.பி.எஸ்) உள்ள சில சுற்றுப்புற பகுதிகளுக்கும், தென்மேற்கு மாவட்டத்தில் உள்ள ரெலாவ் மற்றும் புக்கிட் பேலா பகுதியில் உள்ள சில உயரமான மற்றும் ‘end-of line’ (EoL) சுற்றுப்புறங்களுக்கும், நீர் வழங்க முன்னேற்பாடு செய்யப்பட்டுள்ளது.

PBAPP இன் “நோன்புப் பெருநாள் கொண்டாட்டத்தின் 2024 நீர் தற்செயல் திட்டம்" **வெப்பமான மற்றும் வறண்ட பண்டிகைக் காலத்திற்கு முன்னும் பின்னும் அதிக நீர்ப் பயன்பாடு ஏற்படும்** என்பதால் இத்திட்டம்

செயல்பாடுக் காண்கிறது.

பிப்ரவரி 2024 இல், PBAPP பினாங்கில் ஒரு நாளைக்கு 927 மில்லியன் லிட்டர் (MLD) என்ற கூடுதலான சராசரி நீர்ப் பயன்பாட்டை பதிவு செய்தது. 2023 ஆம் ஆண்டிற்கான 877 MLD ஆண்டு சராசரியைக் காட்டிலும் 927 MLD ஆனது 50 MLD அதிகமான பயன்பாட்டைக் குறிக்கிறது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

7.4.2024 முதல் 14.4.2024 வரையிலான “பாலிக் கம்போங்” மற்றும் நோன்புப் பெருநாள் பண்டிகைக் காலத்தில் நீர்ப் பயன்பாடு 927 MLDக்கு சமமாகவோ அல்லது அதிகமாகவோ இருக்கலாம் என்று PBAPP எதிர்பார்க்கிறது.


எனவே, தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கையாக, 7.4.2024 முதல் 14.4.2024 வரையிலான காலகட்டத்தில் 47 தண்ணீர் தொட்டிகளை (அதிகபட்ச கொள்ளளவு: 2,000 லிட்டர்) நாங்கள் தயார்படுத்துகிறோம். மேலும், தேவைப்பட்டால் தண்ணீர் தேவைக்கு ஏற்ப, கூடுதல் தண்ணீர் தொட்டிகள் அதிகரிக்கப்படும்.

ஜொகூர் மற்றும் சிலாங்கூர் உட்பட தீபகற்ப மலேசியாவில் உள்ள மற்ற அனைத்து மாநிலங்களும், தற்போதைய வானிலை மற்றும் நீர் விநியோக சூழ்நிலை காரணமாக  பண்டிகை காலத்தில் நீர் தற்செயல் திட்டங்களைச் செயல்படுத்துகின்றன.

PBAPP முடிந்த வரை, நீர் விநியோக தடையைத் தவிர்க்க விரும்புகிறது. எனவே, நோன்புப் பெருநாள் கொண்டாட்டத்தின் போது நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு நீர்ப் பயனீட்டாளர்களிடம் கேட்டுக் கொள்கிறோம். பினாங்கு இன்னும் வெப்பமான மற்றும் வறண்ட பருவநிலையை அனுபவித்து வருவதால் அணையின் சேமிப்பு இருப்புக்கள் குறைந்து வருகின்றன.

**அணைகளின் கொள்ளளவு அறிக்கை (7.4.2024)**

பினாங்கு நீர்ப் பயனீட்டாளர்கள் பின்வரும் அணைகளின் மூல நீர் இருப்பை நிரப்பவும் அதிகரிக்கவும் மழை வரும் வரை நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்:




*ஆயர் ஈத்தாம் அணையின் கொள்ளளவு PBAPP ஆயர் ஈத்தாம் அணை செயல் திட்டம் 2024 (AIDAP 2024) மூலம் "பாதுகாக்கப்படுகிறது". சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து (WTP) சுமார் 33 MLD சுத்திகரிக்கப்பட்ட நீர் ஆயர் ஈத்தாம் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது.

** விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணை ஒரு பிரதான வறட்சி இருப்பு அணையாகும். சுங்கை மூடாவிலிருந்து போதுமான மூல நீர் இல்லாத போது மட்டுமே அதன் இருப்பிலிருந்து எடுக்கப்படும்.

*** 5.4.2024 அன்று அறிக்கையிடப்பட்ட அளவீடுகள். இந்த இரண்டு கெடா அணைகளும் வறண்ட காலங்களில் சுங்கை மூடாவிற்கு தண்ணீர் விடுகின்றன.

**7.4.2024 அன்று, பினாங்கின் முதன்மை மூல நீர் ஆதாரமான சுங்கை மூடாவின் நதி மட்டம் PBAPP இன் லஹர் தியாங் இன்டேக்கில் 2.12மீ ஆக இருந்தது, இது 2.0மீ எனும் “பாதுகாப்பான மட்டத்திற்கு” மேல் உள்ளது.**

சுங்கை மூடாவிலிருந்து எடுக்கப்படும் மூல நீர் சுங்கை டுவா WTP இல் சுத்

நீரை திகரிக்கப்படப் பயன்படுத்தப்படுகிறது. பிப்ரவரி 2024 இல் பினாங்கின் 6,89,786 நீர்ப் பயனீட்டாளர்கள் பயன்படுத்திய 927 MLD சுத்திகரிக்கப்பட்ட நீரில் சுமார் 85% சுங்கை டுவா WTP இல் உற்பத்தி செய்யப்பட்டது.

தற்போது, பினாங்கில் ஒட்டுமொத்த நீர் விநியோக நிலை கட்டுப்பாட்டில் உள்ளது. அனைத்துலக மற்றும் உள்ளூர் வானிலை முன் அறிவிப்புகள் பினாங்கில் வரும் 3 முதல் 4 மாதங்களில் கணிசமான அளவில் அதிக மழை பெய்யும் என்று குறிப்பிடுகின்றன. ஏனெனில், லா நினா பருவ மாற்றம் மற்றும் பருவமழைக்கு இடைப்பட்ட பருவத்தின் வருகையைக் குறிக்கிறது.

இருப்பினும், பினாங்கில் நீர் விநியோகத்தைப் பாதிக்கும் அனைத்து முக்கிய அணைகளின் கொள்ளளவு உண்மையான மழையை அதிகரிக்கும் வரை PBAPP உயர் எச்சரிக்கையைத் தொடர்ந்து செயல்படுத்தும்.

2024 ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதங்களில் நீர்ப் பயன்பாட்டை 10% குறைக்குமாறு பினாங்கில் உள்ள அனைத்து நீர்ப் பயனீட்டாளர்களுக்கும் PBAPP இன் வேண்டுகோளை மீண்டும் வலியுறுத்துகிறது. உள்நாட்டு நீர் சேமிப்பு குறிப்புகளுக்கு, தயவுசெய்து www.pba.com.my-ஐ பார்வையிடவும்:

நன்றி.

---


எழுத்தாக்கம் : Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
Corporate Communications Unit

மின்னஞ்சல் : syarifah@pba.com.my